# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# தவணைப் பரீட்சை, யூலை - 2019

FWC

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | இந்து நாகரிகம் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **பகுதி I வினாத்தாள் 25 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

01. "சதுர்மறை" என அழைக்கப்படுவது.
   1) தேவாரங்கள் 2) புராணங்கள் 3) இதிகாசங்கள்
   4) ஆகமங்கள் 5) வேதங்கள்

02. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் நன்மையளிக்கும் அதர்வண மந்திரம்
   1) பௌஷ்டிகானி 2) ஸ்திரீகர்மாணி 3) ராஜகர்மாணி
   4) தூய மந்திரம் 5) பேஷஜானி

03. ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தலை விளக்கும் சிவாகம கிரியை
   1) சிலாபரீட்சணம் 2) பிராயச்சித்தம் 3) கர்ஷணம்
   4) உற்சவம் 5) பிரதிட்டை

agaram.lk

04. இதிகாசங்கள் இறுதி வடிவம் பெற்ற காலம்
   1) சோழர் காரலம் 2) குப்தர் காலம் 3) குஷாணர் காலம்
   4) மௌரிய காலம் 5) பல்லவர் காலம்

05. சங்க காலத்தில் பாலை நில கடவுளாக போற்றப்பட்ட தெய்வம்
   1) விஷ்ணு 2) முருகன் 3) வருணன்
   4) கொற்றவை 5) இந்திரன்

06. இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் விளங்கியவர்
   1) பேராசிரியர் மா. வேதநாதன் 2) பேராசிரியர் பி. கோபாலகிருஷ்ண ஐயர்
   3) பேராசிரியர் வி. சிவசாமி 4) பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள்
   5) பேராசிரியர் சி. பத்மநாதன்

07. வேதம் வேறு தேவாரம் வேறு என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டியவர்
   1) காசிவாசி செந்திநாதையர் 2) சுவாமி விவேகானந்தர் 3) சுவாமி விபுலானந்தர்
   4) ஆறுமுகநாவலர் 5) சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர்

08. வேத விருத்தி புராண விருத்தி, பாரத விருத்தி முதலிய மானியங்கள் விடப்பட்ட காலம்
   1) சங்க காலம் 2) பல்லவர் காலம் 3) சோழர் காலம்
   4) நாயக்கர் காலம் 5) குப்தர் காலம்

09. பிரம சமாஜம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

1) 1875  2) 1828  3) 1815  4) 1772  5) 1829

10. "வீரத்துறவி" "வேதாந்த சிங்கம்" என்ற சிறப்புப் பெயருக்குரியவர்

1) சுவாமி இராமகிருஷ்ணர்  2) ஆறுமுகநாவலர்  3) சுவாமி விபுலானந்தர்
4) அருணாசலதேசிகர்  5) சுவாமி விவேகானந்தர்

11. வேதங்களும் ஆகமங்களும் மெய்யானவை எனவும் இறைவன் நூல் எனவும் போற்றியவர்

1) வசிட்டர்  2) மாணிக்கவாசகர்  3) திருமூலர்
4) சங்கரர்  5) மக்ஸ்மூலர்

12. பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்திய வட இந்தியப் பக்தி நெறியாளர்

1) இராமானந்தர்  2) துளசிதாசர்  3) ஸ்ரீ சைதன்யர்
4) கபீர்தாஸர்  5) மீராபாய்

13. வேதப்பாடல்களில் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்ட சூக்தம்.

1) வருண சூக்தம்  2) புருஷ சூக்தம்  3) நாஸதீய சூக்தம்
4) பிரம்மசரிய சூக்தம்  5) முனி சூக்தம்

14. பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபட்ட பல்லவ மன்னன்

1) மகேந்திரவர்மன்  2) இராசசிம்மன்  3) சிம்ம விஷ்ணு
4) நந்திவர்மன்  5) சிம்ம வர்மன்

15. "சைவ தூஷண பரிகாரம்" என்ற கண்டன நூலை வெளியிட்டவர்

1) சுவாமி விபுலானந்தர்  2) கா.அருணாசலதேசிகர்  3) சுவாமி விவேகானந்தர்
4) ஆறுமுகநாவலர்  5) காசிவாசி செந்திநாதையர்

agaram.lk

❖ **இலக்கம் 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குரிய பொருத்தமானவற்றை அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| **A**<br>சுக்தி | **B**<br>சுவாமி விபுலானந்தர் | **C**<br>அறிவு | **D**<br>நடராச சின்னம் | **E**<br>கர்ஷணம் |
| **F**<br>சுயம்பு | **G**<br>பிரபோத சைன்யர் | **H**<br>1875 | **I**<br>தேவரடியார் | **J**<br>உற்சவம் |
| **K**<br>நந்திக்கொடி | **L**<br>சிலாபரீட்சணம் | **M**<br>யாழ் நூல் | **N**<br>சங்கடனம் | **O**<br>பொதுநூல் |
| **P**<br>ஆரிய சமாசம் | **Q**<br>பிடாரர்கள் | **R**<br>மறை | **S**<br>முத்தமிழ் வித்தகர் | **T**<br>பிரதிட்டை |

16. இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தவருடன் தொடர்புபட்ட தொகுதி

1) B, G, M, S  2) F, R, S, T  3) G, I, P, S  4) B, I, Q, S  5) A, G, I, Q

17. சுவாமி தயானந்த சரஸ்வதியோடு தொடர்புபட்ட தொகுதி

1) A, C, L, R 2) H, M, R, T 3) N, O, P, S 4) A, H, N, P 5) A, H, R, L

18. வேத இலக்கியத்தோடு தொடர்புபட்ட தொகுதி

1) C, G, M, T 2) F, J, N, O 3) A, B, D, M 4) B, H, Q, S 5) C, F, O, R

19. சோழர் காலத்தோடு தொடர்புபட்ட தொகுதி

1) D, F, K, P 2) D, I, K, Q 3) I, M, S, T 4) B, F, K, P 5) A, C, M, T

20. ஆகமங்களோடு தொடர்புபட்ட தொகுதி

1) A, F, N, R 2) F, I, R, T 3) E, J, L, T 4) E, G, O, T 5) A, J, M, S

21. அங்கோ வாட் சிவாலயம் அமைந்துள்ள இடம்

1) கம்போடியா 2) ஜாவா 3) மலேசியா
4) தாய்லாந்து 5) சம்பா

22. "சிற்பக்கலைக் களஞ்சியம்" ஒன்று போற்றப்படும் ரதம் கோயில்

1) நகுலரதம் 2) வீமரதம் 3) அர்ச்சுனரதம்
4) தருமராஜரதம் 5) கொற்றவைரதம்

23. விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள் பற்றி குறிப்பிடும் சிற்பசாத்திர நூல்

1) சிலாசரீட்சணம் 2) மானசாரம் 3) வேதம்
4) தருக்கசங்கிரகம் 5) சைவத்திருக்கோயிற் கிரியை நெறி விளக்கம்.

agaram.lk

24. சமய கலாதத்துவத்தை சிறப்பாக விளக்கி நிற்கும் விக்கிரகம்

1) தட்சணாமூர்த்தி 2) லிங்கோற்பவர் 3) சோமாஸ்கந்தர்
4) திரிபுராந்தகர் 5) நடராஜர்

25. தமிழாகமம் எனப் போற்றப்படும் நூல்

1) ஆகமம் 2) வேதங்கள் 3) திருமந்திரம்
4) திருமுறைகள் 5) தேவாரம்

## பகுதி II

❖ **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

01. இந்து நாகரிக வளர்ச்சியில் மகா புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

   அ) பொருள் மரபு

   ஆ) சமயநெறி

   இ) தத்துவ மரபுகள்

   ஈ) முக்கியத்துவம்

(4x5=20 புள்ளிகள்)

02. ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய மேல்வரும் பணிகளை விளக்குக.

   அ) சமயப்பணிகள்

   ஆ) கல்விப்பணிகள்

   இ) பதிப்பாசிரியர் பணிகள்

   ஈ) சமூகப்பணிகள்

(4x5=20 புள்ளிகள்)

03. சோழப்பெருமன்னர் காலத்தில் சைவசமயம் மேன்மையடைந்தவற்றை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

   அ) அரசியலும் சமயமும்

   ஆ) கோயில்களும் கலைகளும்

   இ) பக்தி இலக்கியம்

   ஈ) வைணவத்தின் வளர்ச்சி

agaram.lk

(4x5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. பல்லவர்கால கட்டடக்கலை வளர்ச்சிப்படி நிலைகளை தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

05. இந்துசமய சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாகிய ஆரிய சமாஜத்தின் பணிகளை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

06. திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலை பெறும் முக்கியத்துவத்தினை பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

07. பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சி நிலையை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. வட இந்தியாவில் தமிழகப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)